15

# “தயவுசெய்து என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்!”

## (3:27-31)

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நான் - பேசப்பட்ட மற்றும் எழுதப் பட்ட - வார்த்தைகளைக் கொண்டு சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு முயற்சிசெய்துகொண்டிருக்கிறேன், சிலவேளைகளில் நான் ஏறக்குறைய சலிப்படைந்திருக்கிறேன். நான் அர்த்தப்படுத்துவது என்ன என்பதை மிகச்சரியாகக் கூறுவதென்பது கடினமாக இருக்கிறது. ஒவ்வொரு வார்த் தையும் பல்வகையான அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும். மேலும், மக்கள் அடிக்கடி கவனமாக கேட்பது (அல்லது வாசிப்பது) இல்லை, ஒரு சிலர் “புகைப்படத்துவ நினைவுகளை” கொண்டுள்ளனர். மக்கள் எனது கூற்றுக்களில் தாங்கள் “நினைவில் வைத்திருப்பவற்றை” மேற்கோள் காண்பித்தலை நான் கேள்விப்பட்டிருக்கிறேன், அது நான் உண்மையில் கூறியவற்றுடன் சிறிதளவே ஒத்துப்போவதாக உள்ளது.

தவறாகப் புரிந்துகொள்ளுதல் என்பது எதுபோன்றிருந்தது என்பதைப் பவுல் அறிந்திருந்தார் - அவர் தவறாகக்குறிப்பிடப்பட்டும் இருந்தார் (3:8ஐக் காணவும்). சிலவேளைகளில் அவர் தமது எழுத்துக்களில், தம்மைத் தற்காத்துக்கொள்ளவோ அல்லது தாம் அர்த்தப்படுத்தியது என்ன அல்லது அர்த்தப்படுத்தாதது என்ன என்பதை விளக்குவதற்காகவோ சற்றே தாமதித்தார். நாம் ஒரு விளக்க வசனப்பகுதிக்கு வந்திருக்கிறோம்: ரோமர் 3:27-31. நீதிமானாக்கப்படுதல் என்ற பாடக்கருத் திற்குப் பவுல், சிந்தனையைத் தூண்டும் அறிமுகம் ஒன்றைக் கொடுத்திருந்தார். நீதிமானாக்கப்படுதல் என்பது விசுவாசத்தின்மூலமாக இருந்தது என்று அவர் வலியுறுத்தியிருந்தார் (3:22, 25, 26), மற்றும் அவர் விசுவாசத்தின் தனிச்சிறப்புகள் பற்றிய விரிவானதொரு கலந்துரையாடலுக்குத் தயாராக இருந்தார் (அதிகாரம் 4). இருப்பினும், அவர் அந்தக் கலந்துரையாடலைத் தொடங்குவதற்கு முன்னர் தாம் கூறியிருந்த மூன்று விஷயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தச் சற்றே தாமதித்தார்.

3:27-31ல் பவுலின் குறிப்புரைகள் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளன, ஆனால் அவைகள் விசேஷமாக யூதர்களுக்கு அறிவுறுத்துவதாக இருந்தன. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற தமது போதனைக்கு யூதர்களே மிகவும் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்பதை

*அவர் புரிந்துகொண்டிருந்தார். மேலும், அவர் தம்மை யாரேனும் தவறாகப் புரிந்துகொண்டு இருந்தால் அல்லது தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தினால், அவ்வாறு செய்பவர், அனேகமாக யூதராகவே இருப்பார் என்பதையும் அறிந் திருந்தார். இந்த நிருபம் முழுவதிலும், அவர் தமது சகநாட்டவருக்கு விசேஷித்த கவனத்தைக் கொடுத்திருந்தார்.*

*நமது இந்தப்பாடத்தை, நான் ''தயவுசெய்து என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்!'' என்று அழைக்கிறேன். வசனப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட விஷயங்களைப் பற்றி நாம் படிக்கையில், பவுல் எதைக்<u>கூறினார்</u> மற்றும் அவர் எதைக்<u>கூறவில்லை</u> என்பவற்றை வலியுறுத்த நான் விரும்புகிறேன்.*

## "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது மேன்மைபாராட்டலை உள்ளடக்காதிருக்கிறது" என்று *நான் கூறுகிறேன் (3:27, 28)*

**பவுல் கூறியது என்ன**

*3ம் அதிகாரம் ஒரு கேள்வி - மற்றும் - பதில் என்ற வடிவமைப்புடன் தொடங்குகிறது. 27ம் வசனத்தில் பவுல் அந்த வடிவமைப்பிற்குத் திரும்பினார்: இப்படியிருக்க, "மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப்பிர மாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப்பிரமா ணத்தினாலேயே. ஆதலால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில் லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்'' (வசனங்கள் 27, 28). விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற போதனை, சுயசாதனைகள் பற்றி மேன்மை பாராட்ட இடமளிக்கவில்லை என்பதே பவுல் தெளிவாக்க விரும்பிய முதல் விஷயமாயிருந்தது.*

*"மேன்மைபாராட்டல்" என்பது, "மேன்மைபாராட்டும் செயல்" என்பதைக் குறிக்கிற* kauchesis *என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அகராதியானது "மேன்மைபாராட்டல்" என்பதை பின்வருமாறு விவரிக்கிறது: "ஒருவர் தம்மைப் பேச்சில் மகிமைப்படுத்திக்கொள்ளுதல்; ... மிக அதிகமான பெருமையுடன் பேசுதல்."[1] மேன்மைபாராட்டல் என்பது பொதுவாக, ஒருவர் தமது சுய சாதனைகள், திறமைகள், அல்லது உடைமைகள் பற்றித் தற்பெருமை கொண்டிருத்தலை உள்ளடக்கியிருக்கிறது. யோவான், "உலகத்திலுள்ளவைகள்" பற்றி எழுதியபோது அவர், "ஜீவனத்தின் பெருமை" என்பதை அதில் உள்ளடக்கினார் (1 யோவான் 2:16). 1 யோவான் 2:16ன் "ஜீவனத்தின் பெருமை"யை பீட்டர்ஸன் என்பவர் "முக்கியமானவராகத் தோன்ற விரும்புதல்" என்று தரவழைத்துள்ளார்* (MSG).

*ஒருவர், முக்கியமான சிலவிஷயங்களில் தாம் பங்கு கொண்டுள்ளதாக நினைக்கும்போது, மேன்மைபாராட்டுதல் அல்லது பெருமைபாராட்டுதல் என்பது "இயல்பானதாக" உள்ளது. ரோமர் 2:17 மற்றும் 2:23 வசனங்கள், யூதர்கள் தேவனைக்குறித்தும் நியாயப்பிரமாணத்தைக் குறித்தும் மேன்மை பாராட்டினர் என்று நமக்குக் கூறுகின்றன. அதாவது, அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர் களாக இருந்ததாகவும் தங்களுக்கு - தங்களுக்கு மாத்திரமே - மோசேயின்*

*நியாயப்பிரமாணம் தரப்பட்டிருந்தது என்றும் மேன்மை பாராட்டினர். இது மேன்மைபாராட்டுதல் என்பது யூதர்களுக்கு மட்டும் உரிய நடைமுறையாக இருந்தது என்று அர்த்தப்படுவதில்லை. பல்வேறுபட்ட கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் புறஜாதியாரைப் பவுல், "துராகிருதம் பண்ணுகிறவர்கள்" மற்றும் "அகந்தையுள்ளவர்கள்" என்று அழைத்தபோது (வசனம் 30) ஒரேவகையான கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவைபோன்ற வார்த்தைகளை நாம், நீண்ட காலத்திற்கு முன்பு இருந்த பவுலின் வாசகர்களுக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தி முடித்துவிட இயலாது. "நம் அளவுக்குச் செய்கை செய்திராதவர்கள்" அல்லது நமது ஒழுக்கத்தர அளவை அளவுக்கு ஒழுக்கக்கோட்பாடுகள் கொண்டிராதவர்களைக் காட்டிலும் நாம் மேன்மை யானவர்கள் என்று உணருதல் எவ்வளவு சுலபமாயிருக்கிறது! நாம் எவ்வளவு அடிக்கடி நமது நற்செயல்களை மேட்டிமையாலும் - சிலவேளைகளில் மேன்மைபாராட்டுதலினாலும் - நாசமாக்கி விடுகிறோம்!*

*"மேன்மைபாராட்டுதல்" பற்றிப் பவுல், "அது நீக்கப்பட்டதே" என்று வலியுறுத்தினார் (வசனம் 27அ). "அது நீக்கப்பட்டதே" என்பது "வெளியேற்றி மூடுதல்" என்று அர்த்தப்படும் (ekkleio என்ற) கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [அனுமதியின்றி] உட்புகும் ஒருவரை வெளியிலேயே நிறுத்துவதற்காகக் கதவொன்றை அறைந்து மூடுதல் பற்றிச் சிந்தியுங்கள். இங்கு ஆவ்ரிஸ்ட் என்ற கடந்தகால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள், "மேன்மைபாராட்டுதல் என்பது ஒரேயடியாக நீக்கப்பட்டுள்ளது?" என்று அர்த்தப்படுகின்றன.*[2]

*மேன்மைபாராட்டுதல் என்பது எதன் அடிப்படையில் நீக்கப்பட்டது? "கிரியைப்பிரமாணத்தின்" அடிப்படையிலேயா (வசனம் 27ஆ)? அல்லவே. மக்கள் தங்கள் கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்படுகின்றனர் என்று போதிக்கும் போதனை நிலைப்பாடு எதுவும், மேன்மைபாராட்டுதலை ஊக்கம் இழக்கச் செய்வதற்குப்பதிலாக அதை ஊக்குவிப்பதாக உள்ளது. சுயதிருப்தி என்பது சுயத்தை மேன்மைப்படுத்துதலுக்கு வழிநடத்துகிறது, இது சுயத்தைப் பாராட்டுதலுக்கு வழிநடத்துகிறது.*[3] *ஜிம் மெக்கைகன் என்பவர், "கிரியைகளின் எந்தப்பிரமாணமும் இரக்கத்திற்குப் பதிலாகத் தகுதியை வலியுறுத்துகிறது, இது நிறைவுக்குப் பதிலாக வீண்தன்மையை விளைவிக்கிறது, புகலிடத்திற்குப் பதிலாக கோபத்தைக் கொண்டுவருகிறது" என்று எழுதினார்.*[4]

*நாம் கிரியைகளின் அடிப்படையில் அல்ல, ஆனால் அதற்கு மாறாக, "விசுவாசத்தின்" அடிப்படையில் இரட்சிக்கப்படுவதால் மேன்மைபாராட்டுதல் விலக்கப்பட்டுள்ளது (வசனம் 27இ) - நாம் செய்துள்ளவற்றினால் அல்ல ஆனால் தேவன் நமக்காகச் செய்துள்ளவற்றினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். பிலிப்ஸின் மொழிபெயர்ப்பில்,* "the whole matter is now on a different plane - believing instead of achieving" *("இப்போது முழுவிஷயமும் சாதித்தல் என்பதற்குப் பதிலாக விசுவாசித்தல் என்ற மாறுபட்டதொரு தளத்தில் இருக்கிறது") என்றுள்ளது.*

*கிரியைகளின் அடிப்படையில் இரட்சிப்பு என்பது கீழிருந்து (நமது சுயமுயற்சிகளில் இருந்து) இரட்சிப்பைத் தேடுதலாக இருக்கையில், விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிப்பு என்பது மேலிருந்து (தேவனிடத்தில் இருந்து) இரட்சிப்பைத் தேடுதலாக உள்ளது.*[5] *கிரியைகளினால் இரட்சிப்பு என்பது சுயத்தை மையமாகக் கொண்டிருக்கையில், விசுவாசத்தினால் இரட்சிப்பு*

என்பது தேவனை மையமாகக் கொண்டிருக்கிறது. மூழ்குவதில் இருந்து ஒரு மனிதன் காக்கப்பட்டிருந்தால், - அவன் *தான்* செய்துள்ளவை பற்றி - தன்னைக் காப்பாற்றியவர்மீது எப்படி நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது பற்றி மேன்மை பாராட்டிக் கொண்டிருப்பானா?[6] இல்லை, அவனைக் காப்பாற்றியவரையே அவனது வார்த்தைகள் துதிக்கும்.

பவுல் தமது கலந்துரையாடலைத் தொடருகையில், 21 முதல் 26 வரையான வசனங்களில் தாம் போதித்திருந்தவற்றை அவர் மறுபடியும் வலியுறுத்தினார்: "ஆதலால், [நாம்[7]] மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் ['தேவனுடன் நேராக்கப்படுகிறான்'; NCV] என்று தீர்க்கிறோம்[8]" (வசனம் 28). "இல்லாமல்" என்பது "இருந்து வித்தியாசமான" அல்லது "நீங்கலாய்" என்று அர்த்தப்படுகிற *choris* என்பதன் மொழிபெயர்ப்பாக உள்ளது.[9] AB வேதாகமத்தில் "independent of and distinctly apart from" என்றுள்ளது.

28ம் வசனத்தில் கிரேக்க வசனப்பகுதியானது "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல்"[10] என்றுள்ளது - இதில் நியாயப்பிரமாணம் என்ற வார்த்தைக்கு முன்பாகத் திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவுமில்லை - ஆனால் பவுல் தமது சிந்தையில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்தார் என்பது சந்தர்ப்பப்பொருளில் இருந்து தெளிவாகிறது. இருப்பினும், பொதுவான ஒரு கொள்கை மீண்டும் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகிறது: நாம் *எந்தப்*பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதாலும் இரட்சிக்கப்பட முடியாது - ஏனென்றால் நம்மால் *எந்தப்*பிரமாணத்தையும் பரிபூரணமாகக் கடைப்பிடிக்க இயலாது.

27 மற்றும் 28ம் வசனங்களில் பவுலின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது: கிருபையினால் இரட்சிப்பு என்பது சுயசாதனைகள் பற்றி மேன்மை பாராட்டுவதற்கு இடம் அளிப்பதில்லை. அவர் இதற்கு முன்பு எபேசு நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்று எழுதியிருந்தார் (எபேசியர் 2:8, 9). அவர் கொரிந்தியர்களுக்கு எழுதியபோது, "மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக" என்று கூறினார் (1 கொரிந்தியர் 1:30). கலாத்தியர்களுக்கு அவர், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக" என்று கூறினார் (கலாத்தியர் 6:14அ; பிலிப்பியர் 3:3ஐக் காணவும்).

டிவைட் மூடி என்பவர் ஒருமுறை, மேன்மைபாராட்டுதல் என்பது விளக்கப்பட்டதால் தாம் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்தார் என்பது பற்றிக் கூறினார்:

> ஒரு மனிதன் பரலோகம் செல்லத் தானே தனக்கு வழியை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்றால், அதன் முடிவைப்பற்றி நீங்கள் ஒருக்காலும் கேள்விப்படமாட்டீர்கள். ஒரு மனிதன் மற்றவர்களைவிட சற்று அதிகமாக முன்னேறவும், சில லட்சரூபாய்களைச் சேர்த்து வைக்கவும் முடிந்தது என்றால், அவன் சுயசம்பாத்தியம் செய்வதாகத் தன்னைத் தானே

பெருமைபாராட்டிக் கொள்வதைக் கேட்பீர்கள். நான் களைப்படையும் அளவுக்கு இவ்விதமான பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன். நித்தியத்தை அடைவதற்கு தானே கிரியை செய்ததாக எவரொருவரும் அங்கே மேன்மை பாராட்டுவதை நாம் ஒருக்காலும் கேள்விப்பட மாட்டோம் என்பது பற்றி நான் மகிழ்வடைகிறேன்![11]

பவுல் முன்பே எடுத்துரைத்திருந்தபடி, 27 மற்றும் 28ம் வசனங்களில் அவரது குறிக்கோள் தெளிவாக உள்ளது - மற்றும் அதன்மீதான பொதுவான ஒப்புமையும் தெளிவாக உள்ளது. இருப்பினும், பவுலின் சொற்றொடராக்கம் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாக, 27ம் வசனத்தில், அவர் "பிரமாணம்" என்ற வார்த்தையைக் கொண்டு எதை அர்த்தப்படுத்தினார்? "எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயே? அல்ல; விசுவாசப்*பிரமாணத்தினாலேயே.*" நமது படிப்புகளில் நாம் "பிரமாணம்" என்ற வார்த்தையை அடிக்கடி கண்டிருக்கிறோம். பவுல் மோசேயின் பிரமாணத்தைக் குறிப்பிட்டாரா அல்லது பொதுவான பிரமாணத்தைக் குறிப்பிட்டாரா என்பதே முதன்மையான கேள்வியாக இருந்துள்ளது. இருப்பினும், அவர் இவ்வார்த்தையை சிலவேளைகளில் ஒரு துணைக்கருத்திலும் பயன்படுத்தினார். (இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் "பிரமாணம் [*Nomos*] என்ற வார்த்தை பற்றிய படிப்பு" என்பதில் காணவும்.) 27ம் வசனத்தில் பவுல் அனேகமாக, *nomos* என்ற வார்த்தையை "கொள்கை" என்று அர்த்தப்படும் துணைக்கருத்திலேயே பயன்படுத்தினார் எனலாம்: "மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்த [கொள்கையினாலே]? கிரியையினால் [நீதிமானாக்கப்படும் கொள்கையினாலா]? அல்ல; விசுவாசத்தினால் [நீதிமானாக்கப்படும் கொள்கையினாலேயே]."

**பவுல் எதைக் கூறவில்லை**

நாம் நமது கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை, ஆனால் அதற்கு மாறாக, இயேசுவின்மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதால், நீங்களும் நானும் மேன்மை பாராட்ட ஒன்றையும் கொண்டிருப்பதில்லை என்பதே ரோமர் 3:27, 28ல் பவுலின் முதன்மை செய்தியாக உள்ளது. பழைய பாடல் ஒன்றின் வார்த்தைகளில், "இயேசுவின் இரத்தம் மற்றும் நீதி என்பவற்றைவிடக் குறைவான ஏதொன்றிலும் எனது நம்பிக்கை கட்டப்பட்டிருப்பதில்லை" என்று காண்கிறோம்.[12] இந்த சத்தியத்தைப் பற்றிய கண்ணோக்கைத் தவறவிட வேண்டாம். இதை நான் விரித்துரைக்கும் முன்னதாக, 3:27, 28ல் பவுல் எதைக்*கூறவில்லை* என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் பக்கச்சாலையொன்றில் நாம் பயணம் செய்தல் அவசியமாக உள்ளது: நாம் விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகிறோம் என்று அவர் *கூறினார்*, ஆனால் நாம் விசுவாசத்தால் *மாத்திரமே* இரட்சிக்கப்படுகிறோம் என்று அவர் *கூறவில்லை.*

குறிப்பிடத்தக்க சீர்திருத்தவாதியான மார்ட்டின் லூத்தர் என்பவர் (1483-1546) தனது ஜெர்மன் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் இந்த 28ம் வசனத்தில் "மாத்திரம்" என்ற வார்த்தையை இடைச்செருகி இவ்வசனம், ஒரு நபர் "விசுவாசத்தால் *மாத்திரம்*" நீதிமானாக்கப்படுகிறார் என்று போதிக்கும்படியாக

இதைச் சீரழித்துப்போட்டார்.[13] லூத்தர் ஒரு பாதிரியாராக இருந்து பிற்பாடு கத்தோலிக்க சபையின் மதிமயக்கத்தில் இருந்து நீங்கியவர் ஆவார். அவர் தாம் அறிந்திருந்த "கிரியைகளினால் இரட்சிப்பு" என்ற முறைமைக்கு எதிராகச் செயல்படுவதில், அதிகமாக செயல்புரிந்து, கிரியைகள் என்பதையே முற்றிலும் நீக்கிப்போட அவர் முயற்சி செய்தார். ரோமர் 3:28ல் "மாத்திரம்" என்ற வார்த்தை கூட்டப்பட்டதானது இவ்வசனத்தை யாக்கோபு 2:24க்கு நேரெதிரானதாக ஆக்கிற்று, ஆனால் லூத்தர் அந்தப் பிரச்சனையை, யாக்கோபின் புத்தகம் தகுதியற்றதாக, "வைக்கோல்போன்ற நிருபமாக" இருந்தது என்று அறிவித்ததன்மூலம் தீர்த்துவைத்தார்.[14]

லூத்தருடைய இந்தத் துடுக்குத்தனமான கூட்டுதலை எத்தனை விளக்கவுரையாளர்கள் புகழ்ந்துரைத்து இருக்கின்றனர் என்பது பற்றி நான் வெகுவாக ஆச்சரியம் அடைந்தேன்.[15] நீண்ட நாட்களுக்கு முன்பே "விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு" என்பது "சுவிசேஷத்துவக் கிறிஸ்தவம்" என்று அழைக்கப்படுவதன் முதன்மைப் போதனையானதால் நான் திகைப்படையக்கூடாது என்று யூகிக்கிறேன்.

கத்தோலிக்கரல்லாத யாவருமே அடக்குமுறை மதமுறைமையின் விலங்குகளை முறித்தமைக்கு லூத்தர் என்பவருக்குக் கடன்பட்டுள்ளனர். லூத்தரின் வேதவசனங்களின் ஜெர்மானிய மொழிபெயர்ப்பு ஒரு மாபெரும் சாதனையாக இருந்தது, அது ஒரு மாபெரும் சேவையாக இருந்தது - ஆனால் அவர் "மாத்திரம்" என்ற வார்த்தையைக் கூட்டியதால் *தவறானவராக இருந்தார்* என்று கூற நான் தயங்குவதில்லை. விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு உண்டாகும் என்று *அவர்* நம்பினார் என்று *அவர்* கூற விரும்பினால் அது வேறு விஷயமாக உள்ளது. ஏவுதல் பெற்ற வேதவசனங்களில் அதை உட்செருகி, *தேவன்* அதைக் கூறுவது போன்று ஏற்படுத்துதல் என்பது முற்றிலும் வேறு விஷயமாக உள்ளது.

முதலிடத்தில், வேதாகமம் [அதில்] ஒரு வார்த்தையைக் கூட்டுவதைக் கண்டனம் செய்கிறதால் (உபாகமம் 4:2; நீதிமொழிகள் 30:6; வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19 ஆகியவற்றைக் காணவும்) லூத்தர் தவறானவராக இருந்தார். இரண்டாமிடத்தில், வேதாகமத்தில் ஒருவர் ஒருமுறை எதையாவது கூட்டிவிட்டார் என்றால், நிறுத்த இடம் எதுவும் இல்லை என்பதால் லூத்தர் தவறானவராக இருந்தார். லூத்தரைப் பின்பற்றுபவர்கள், *தாங்கள்* முக்கியமற்றது என்று விதிக்கிற வேதாகம நிபந்தனை எதையும் "அத்தியாவசியமற்றது" என்று பெயரிடுவதற்காக "மாத்திரம்" (அல்லது "மட்டும்") என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர்.

நான் வசிக்கும் இடத்தில், "மாத்திரம்" மற்றும் "மட்டும்" என்ற வார்த்தைகள், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்ற கருத்தை நீக்கிப்போட முயற்சித்தலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலரால் அடையப்பட்டுள்ள முடிவுகளின்படி, கிருபையின் அர்த்தத்தைப் பேதுரு புரிந்துகொண்டிருந்தால், "நாங்கள் என்னசெய்யவேண்டும்?" என்று பாவிகள் கேட்டபோது (நடபடிகள் 2:37) அவர் மாறுபட்ட பதிலை கொடுத்திருப்பார். அவர், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (வசனம் 38) என்பதற்குப் பதிலாக, "இரட்சிப்பு என்பது விசுவாசத்தினால் மாத்திரமே உண்டாகிறது. இயேசுவை நீங்கள் விசுவாசித்து தேவனுடைய பாவமன்னிப்பை மகிழ்வுடன் அனுபவியுங்கள்'' என்று

கூறியிருக்க வேண்டும் என்பதாக அவர்கள் நம்புகின்றனர். சவுல்/பவுல் என்பவர், "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்?" (நடபடிகள் 22:10) என்று கேட்ட சந்தர்ப்பத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். ஏவுதல் பெற்ற பிரசங்கியாரான அனனியா, லூத்தரின் சிந்தனையைப் பகிர்ந்து கொண்டிருந்தால், அவர் "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறியிருக்கமாட்டார் (வசனம் 16). அதற்குப்பதிலாக, அவர் "இயேசுவின்மீது நீ உன் நம்பிக்கையை வை" என்று மாத்திரம் கூறியிருப்பார்.

J. W. மெக்கார்வீ என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ரோமாபுரியின் (கிரியைகளினால் மனிதர்கள் நீதிமான்களாக்கப் படுகின்றனர் என்ற) தவறுடன் போராடியதில் லூத்தர், இன்னொரு தவறுக்குள் விழுந்து போனார், ஏனெனில் மனந்திரும்புதல், விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதலுக்கு வழிமுறையாக இருக்கிறதே ஒழிய, இவ்விரண்டிலுமே [நம் சுய] *தகுதி* என்பது எதுவும் இருப்பதில்லை. *பாவநிவாரண பலியான கிறிஸ்துவின் இரத்தம்,* நாம் நீதிமான்களாக்கப்படுதலுக்குத் தகுதிவாய்ந்த காரணமாக உள்ளது, மற்றும் விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் முதலியவற்றினால் நாம் கிறிஸ்துவின் இரத்தத்தை நமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்கிறோம். நமது பகுதியில் இந்த செயல்கள் நம்மை நீதிமான்களாகத் *தகுதிப்படுத்துவதில்லை,* ஆனால் அவைகள் கிறிஸ்துவினால் விதிக்கப்பட்ட *நிபந்தனைகளாக* உள்ளன, அவற்றை நிறைவேற்றும்போது அவர் தமது இரத்தத்தின் பலன்களை நமக்கு அருளுகிறார்; அதாவது, நம்மை நீதிமான்களாக்குகிறார்.[16]

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதை நான் நம்புகிறேன். *நான்,* பரிபூரண மான கீழ்ப்படிதலின் அடிப்படையில் இன்றி, விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டதற்காகத் *தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.* அதே வேளையில், எனது கர்த்தரால் விதிக்கப்பட்ட எந்த நிபந்தனைபற்றியும் கேள்வி எழுப்பவோ அல்லது அதை இகழ்ந்துரைக்கவோ எனக்கு எந்த உரிமையும் இல்லை. அவ்வாறு செய்தல் என்பது, விசுவாசத்தின் வெளிப்பாடாக இராமல், நம்பிக்கைக் குறைவின் வெளிப்பாடாக உள்ளது.

## "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது சகிப்புத்தன்மையற்ற நிலையை நீக்கிப்போட வேண்டும் என்று *நான்* கூறுகிறேன்" (3:29, 30)

**பவுல் என்ன கூறினார்**

28ம் வசனத்தில் பவுல், "மனுஷன் *நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில் லாமல்* விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" என்று வலியுறுத்தினார். இப்படிப்பட்ட கூற்றானது ஒரு யூதனுடைய மனதைப் புண்படுத்தியிருக்கும். ஒரு யூதன், தான் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தல், தன்னை விசேஷித்தவனாக்கியது என்றும் - இது தன்னை ஒரு புறஜாதியானைக் காட்டிலும் சிறந்தவன் (மிகவும் சிறந்தவன் என்று) ஆக்கியதென்பதுமான -

நம்பிக்கையை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு இருந்தான்.

1:18-3:20ல், பவுல் யூதரும் புறஜாதியாரும் ஒரேவிதமான பாவங்களைச் செய்திருந்தனர் என்று காண்பித்ததின்மூலம் அவர்கள் இருசாராரையும் ஒரே மட்டத்தில் வைத்திருந்தார். இப்பொழுது அவர், ஒரே தகப்பனை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதைக் குறிப்பிடுவதினால், அவர்களை ஒரே நடையிலும் வைத்தார். அவர், "தேவன் யூதருக்கு மாத்திரமா தேவன்?" என்று கேட்டார் (3:29அ). சில யூதர்கள் அவ்வாறு நினைத்தனர். தொடர்ந்து பவுல், "புறஜாதிகளுக்கும் தேவனல்லவா?" என்றார் (வசனம் 29ஆ). பெரும்பான்மை யான யூதர்கள் தயக்கத்துடன், ''ஆம்'' என்று பதில் அளித்திருப்பார்கள். அழுத்திக் கேட்கப்பட்டால் அவர்கள், தேவன் புறஜாதியாரைப் படைத்தவராக, ஆட்சிசெய்பவராக, மற்றும் நியாயாதிபதியாக இருந்தார் என்பதை ஒப்புக்கொள்வார்கள் (சங்கீதம் 96:10; எரேமியா 10:7ஐக் காணவும்) - ஆனால் அவர்கள், புறஜாதியாருக்கு அவர் *இரட்சகராக* இருந்தார் என்பதை ஒப்புக்கொள்வதைக் கடினமானதாகக் கண்டனர்.

பவுல் தமது சொந்தக் கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்: "ஆம், புற ஜாதிகளுக்கும் அவர் தேவன்தான், ... தேவன் ஒருவரே" (ரோமர் 3:29இ, 30). பவுலின் முடிவு யூதத்துவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியில் இருந்த - ஒரு தெய்வக்கோட்பாடு[17] என்ற - சத்தியத்தின் அடிப்படையில் அமைந் திருந்தது, ஒரு வசனப்பகுதி ஒவ்வொரு யூதருக்கும் நன்கு பழக்கமானதாக இருந்தது. பக்தியுள்ள யூதர்கள் ஒவ்வொரு நாளும், "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபாகமம் 6:4) என்று தொடங்கும், ஷேம்மா[18] என்ற ஜெபத்தை மனப்பாடமாக ஒப்புவித்தனர். ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார் என்றால், அவர் யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருசாராருக்கும் தேவனாக இருக்க வேண்டும். புறஜாதியார் ஒரு தனிப்பட்ட தேவனைக் கொண்டிருந்தால், அப்போது *இரண்டு* தேவர்கள் இருப்பார்கள் - இது எந்த ஒரு யூதருக்கும் ஏற்றுக்கொள்ளப்பட இயலாத முடிவாகும்.

தேவன் புறஜாதியாருக்கும் தேவனாக இருந்தால், அவர்களும் மனிதகுலத்தை மீட்பதற்கான தேவனுடைய திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது இயல்பானதாகும். பவுலின் அறிமுகக்கூற்றில், அவர் "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் [புறஜாதியாரிலும்] விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது [சுவிசேஷம்] தேவபெலனாயிருக்கிறது" என்று கூறியிருந்தார் (ரோமர் 1:16). இப்போது அவர், அந்த சத்தியத்தை மறுபடியும் வலியுறுத்தினார். இங்கு அவரது கூற்று தனது முழுமைத்துவத்தில் உள்ளது: "ஆம், புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான். விருத்தசேதனமுள்ளவர்களை [யூதர்களை] விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை[19] [புறஜாதியார்களை] விசுவாசத்தின் மூலமாயும்[20] நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே" (3:29இ, 30).

F. F. புரூஸ் என்பவரின் கூற்றுப்படி, "யூதர்களுக்கும் புறஜாதியார்களுக்கும் இடையில் இருந்த பிளவு, பழங்கால உலகில் இணைப்பு ஏற்படுத்த இயலாத மிகப்பெரிய பிளவாயிருந்தது''[21] - ஆனால் அந்தப் பிரிவில், இயேசுவின் சிலுவையினால் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு கூறினார்,

எப்படியெனில், அவரே [கிறிஸ்துவே] நம்முடைய சமாதான காரணராகி,

*இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியாரையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை [மோசேயின் நியாயப்பிரமாணத்தை]த் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம் சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீர மாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2:14-16).*

புரூஸ் என்பவர், "[ரோமர் 3:29, 30ல்] பவுலின் விவாதம், அவரது நாட்களில் இருந்த சூழ்நிலைகளில் போன்றே, நமது தற்காலத்தியப் பிரிவினைகளின் வெளிச்சத்திலும் மதிப்புடையதாகவே உள்ளது; கிழக்கு மேற்கு, கறுப்பு வெள்ளை என்பவற்றிற்கு இடையில் வித்தியாசமே இல்லை, ஏனெனில் எல்லாருமே தேவனுடைய இலவசமான கிருபை தேவைப்படுபவர்களாக, ஒரே நிபந்தனைகளின்கீழ் அதைப் பெற்றுக்கொள்பவர்களாக இருக்கிறோம்" என்று கூற முன்சென்றார்.[22] கிறிஸ்தவமானது, பல்வேறு இனங்களையும், பல்வேறு சமூகத்தரங்களையும், பல் வேறு பொருளாதாரச் சூழ்நிலைகளையும் பல்வேறு கல்விப்பின்னணிகளையும் - மற்றும் பல்வேறு ஜாதிகளையும்கூட - சேர்ந்த ஆண்களையும் பெண்களையும், சிறுவர்களையும் சிறுமிகளையும், ஒன்றுகூட்டக்கூடிய தனது திறனில் தனிச்சிறப்புமிக்கதாக உள்ளது, அது இவர்களை, தமது கிருபையினால் தங்களை இரட்சித்தவரை ஒன்றுகூடி ஆராதிக்கவும் துதிக்கவும் இவ்வாறு ஒன்றுகூட்டுகிறது.

டாம் ரைட் என்பவர், ரோமர் 3:29, 30ன் செய்தி "எளிமையாக உள்ளது: இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ள யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் அவர்கள் ஒரே மேஜையை சுற்றி உணவைப் பகிர்ந்துகொள்ளுபவர்களாகவும் இருக்க வேண்டும்" என்று கூறினார்.[23] ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருத்தல் என்பது பற்றி ஹால்ஃபோர்டு லுயுகாக் என்பவரின் பின்வரும் குறிப்புகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்:

*நமது செயல்பாடுகளில், நாம் மக்களை ஒரே குடும்பமாக நடத்தத் தவறினால், நாம் உண்மையில் ஒரே தேவனில் விசுவாசம் கொள்வ தில்லை … . யூதராயினும் அல்லது புறஜாதியாராயினும், அவர்களின் விசுவாசத்தின் அடிப்படையில் அவர்களைத் தேவன் ஒரேவிதமாகவே நடத்துகிறார் என்று பவுல் கூறுகிறார். தேவன் நிறக்குருடாயிருக்கிறார். அவரிடத்தில் பட்சபாதம் இல்லை. சிலரைத் தாழ்ந்தவர்கள் என்று விலக்கிவைக்கும் வேலிகளை அவர் அருவருக்கிறார். நாம் சிலருடன் தீண்டாமைக்கொள்கைகள் கொண்டிருந்தால், நாம் ஒரே தேவனில் விசுவாசம் கொள்பவர்கள் அல்ல. மனிதகுலத்தின் ஒருமைத்தன்மையை நாம் நமது செயல்களினால் மறுதலித்தால், நாம் உண்மையில் பலதெய்வ வணக்கத்தாராகவே இருக்கிறோம்.[24]*

### பவுல் எதைக் கூறவில்லை

ஒருவேளை, நான் பவுல் ரோமர் 3:29, 30ல் எதைக்கூறவில்லை என்பதன்மீதான ஒரு குறிப்பைக் கூடுதலாகக் கூறவேண்டியிருக்கலாம்: யூதர்கள்

*யூதர்களாயிருப்பதை விட்டொழித்தனர் என்றோ அல்லது புறஜாதியார்கள் புறஜாதியாராயிருப்பதை விட்டொழித்தனர் என்றோ அவர் கூறவில்லை. மாறாக, இரட்சிப்பைப் பொறுத்தமட்டில் இப்படிப்பட்ட வித்தியாசங்கள் முக்கியமற்றவையாயிருந்தன என்றே அவர் வலியுறுத்தினார். எல்லாரும் ஒரே அடிப்படையில்தான் இரட்சிக்கப்படுகின்றனர்.*

*ரோமர் 3:29, 30ம் கலாத்தியர் 3:26-28ம், சிலுவையானது எல்லா வித்தியாசங்களையும் நீக்கிப்போட்டது என்று போதிப்பதாக சிலர் வாதிப்பதாலேயே நான் இதைக் கூறுகிறேன். குறிப்பாக, அவர்கள் கணவர் தமது மனைவிக்குத் தலையாக இருக்கிறார் என்ற புதிய ஏற்பாட்டுப் போதனையையும் (எபேசியர் 5:23ஐக் காணவும்), சபையில் பொது ஆராதனை உட்பட (1 தீமோத்தேயு 2:8; 1 கொரிந்தியர் 14:34ஐக் காணவும்) ஆண் நடத்துவத்துவம் வலியுறுத்தப்படுதல் பற்றிய புதிய ஏற்பாட்டு வலியுறுத்தத்தையும் (1 தீமோத்தேயு 3:2ஐக் காணவும்) ஓரங்கட்ட முயற்சி செய்கின்றனர். ஆண்கள் மற்றும் பெண்கள் யாவரும் ஒரேவகையில்தான் இரட்சிக்கப்படுகின்றனர், மற்றும் தேவனுடைய பார்வையில் யாவரும் சமமாகவே உள்ளனர். இது, அவர்கள் ஆண்களாகவும் பெண்களாகவும் இருத்தலை விட்டொழித்தனர் மற்றும் ஆண்கள் பெண்கள் ஆகியவர்களிடத்தில் இருந்து தேவன் எதை எதிர்பார்க்கிறார் என்பது பற்றிய வேதாகமபோதனைக்கு இனியும் கீழ்ப்பட்டவர்கள் அல்ல என்று கூறுவதில் இருந்து தொலைவில் உள்ளது.*

## "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது தேவன் கூறுவதைச் செய்வதன் அவசியத்தை நீக்கிப்போடுகிறது என்று நான் கூற*வில்லை*" *(3:31)*

**பவுல் கூறியது என்ன**

*"மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" என்று பவுல் கூறியிருந்தார் (ரோமர் 3:28). தேவன் புறஜாதியாரை (நியாயப்பிரமாணம் இன்றி) இரட்சிக்கும் அதே அடிப்படையில் யூதரை (நியாயப்பிரமாணத்துடன்) இரட்சிப்பார் என்று வலியுறுத்தி இருந்தார் (வசனங்கள் 29, 30). பவுல் இப்படிப்பட்ட கூற்றுக்களை ஏற்படுத்தியிருந்த நிலையில், தம்மை விமர்சிப்பவர்கள் தம்மீது, "நியாயப்பிரமாணத்திற்கு எதிரானவன்" ("antinomianism") என்று குற்றம்சாட்டுவார்கள் என்பதை அறிந்திருந்தார். இந்தப்பெரிய வார்த்தை பின்வரும் இரு கிரேக்கவார்த்தைகளின் அடிப்படையில் அமைந்ததாகும்: anti ("எதிராக") மற்றும் nomos ("நியாயப்பிரமாணம்"). நியாயப்பிரமாணத்திற்கு எதிரானவர்கள், "சட்டப்பூர்வமாகக் கேட்கப்படுபவைகள்" அல்லது ஒழுக்கநீதியான கட்டுப்பாடுகளை நம்பவில்லை.[25] ஆகையால், பவுல் தாம் விசுவாசித்தாலும் இல்லையென்றாலும் நியாயப்பிரமாணத்திற்கு ஒரு மதிப்பு இருந்தது என்று உரைத்து இப்பகுதியை முடித்தார். அவர் "அப்படியானால் [நாம்[26]] விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா?" என்று கேட்பதன்மூலம் தொடங்கினார் (வசனம் 31அ).*

*"அவமாக்குதல்" என்பது "செயலற்றதாகக் குறைத்தல்" என்று அர்த்தப்படுகிற (kata ["கீழ்"] என்ற வார்த்தையுடன் argos ["செயலற்றது"]) என்ற வார்த்தையை இணைத்துப் பெற்ற (katargeo) கூட்டுவார்த்தையாக உள்ளது.[27]*

KJV வேதாகமத்தில் "make void" என்றுள்ளது; "destroy" ["அழித்தல்"] என்பது நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது.[28] *Nomos* என்பதற்கு முன்பாகத் திட்டவட்டமான சுட்டுச்சொல் எதுவும் இல்லை, ஆனால் பவுல் குறிப்பாக யூதத்துவ எதிர்ப்புரைகளை முன்னெதிர் நோக்கியிருந்தார். ஆகவே, நாம் முதலில் அவரது கேள்வி அந்த நிலைப்பாட்டில் இருந்து எவ்வாறு கண்ணோக்கப்பட்டது என்று ஆழ்ந்து சிந்திப்போம்: "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற போதனை மோசேயின் நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறதா?"

மீண்டுமாகப் பவுல், அதிர்ச்சியூட்டும் தொனியுடன் பதில் அளித்தார்: "அப்படியல்ல!" (வசனம் 31ஆ). "நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறோமே" (வசனம் 31இ) என்று கூறினார். "நிலைநிறுத்துதல்" என்ற வார்த்தை, "நிற்கச்செய்தல்" என்று அர்த்தப்படுகிற *histemi* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது.[29] *Nomos* என்பதற்கு முன்பாகத் திட்டவட்டமான சுட்டுச்சொல் எதுவும் இல்லாத நிலையில் இவ்விடத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மீதே கவனக்குவிப்பு இருந்தது. இவ்விடத்தில் பவுல் இந்தச் சிந்தனையை விரிவாக்கவில்லை, ஆனால் பிந்திய அதிகாரங்களில் அவர் நியாயப்பிரமாணம் செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாத விஷயங்கள் பற்றி அதிகமாய்க் கூறினார். கிறிஸ்து வந்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்ற உண்மையானது, நியாயப்பிரமாணத்தை "நிலைநாட்டிய" வகையில் மோசேயின் நியாயப்பிரமாணத்தை *நிறைவேற்றியது.* கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், நியாயப்பிரமாணம் "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு ... நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" என்று பவுல் கூறினார் (கலாத்தியர் 3:24) - அது அந்த நோக்கத்தை நிறைவேற்றியது.

அடுத்ததாக நாம் இவ்வேத வசனப்பகுதியை நேரடியாகக் கண்ணோக்குவோம்: "அப்படியானால் விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல, நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே." இங்கு வலுவார்ந்த அடிச்செய்தியொன்று இருப்பதாகக் காணப்படுகிறது: நாம் கிரியைகளுக்குப் பதிலாக விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம் என்ற உண்மை, இனியும் நாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிதல் பற்றி அக்கறைகொள்ளத் தேவையில்லை என்று அர்த்தமாகிறதா?[30] இது நாம் விரும்பும் எவ்வழியிலும் வாழ நாம் சுதந்தரமாயிருக்கிறோம், அதாவது தேவபக்தியுள்ள வாழ்வை வாழ்தல் என்பது இனியும் அவசியமில்லை என்று அர்த்தப்படுகிறதா? இதற்கு "அப்படியல்ல" என்பதே பவுலின் உடன்பாடு ஏற்படுத்தப்பட இயலாத பதிலாக உள்ளது. "நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே" என்று அவர் கூறினார். அதாவது, "நாம் நியாயப்பிரமாணத்தின் மதிப்பை நிலைநாட்டுகிறோம், அதாவது தேவன் இன்னமும் பிரமாணங்களைக் கொண்டுள்ளார், அவற்றிற்குக் கீழ்ப்படியும்படி நாம் இன்னமும் எதிர்பார்க்கப்படுகிறோம்."

நாம் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலின் அடிப்படையில் அல்ல, விசுவாசத்தின் அடிப்படையிலேயே இரட்சிக்கப்படுகிறோம் என்று பவுல் பலமாக எடுத்துரைத்தபடியால், விசுவாசத்தின் அடிப்படையில் நீதிமானாக்கப்படுதல் என்ற போதனை எவ்வாறு "நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறது"? முதலிடத்தில், இரட்சிக்கும் விசுவாசம் என்பது கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக உள்ளது. விசுவாசி, தேவனுடைய பிரமாணத்

திற்குக் கீழ்ப்படிதல் பற்றி அக்கறையாக இருக்கிறார்; அவிசுவாசி அவ்வாறு அக்கறை கொண்டிருப்பதில்லை. இரண்டாமிடத்தில், விசுவாசியானவர் தேவன் தனக்குச் செய்திருப்பவற்றைப் புரிந்துகொள்கிறார், தேவன் செய்திருப்பவற்றை *மதிக்கிறார்*, எனவே அவர் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய *விருப்பமாக இருக்கிறார்*. "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1 யோவான் 4:19); "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்" (1 யோவான் 5:3அ).

மெக்கைகன் என்பவர் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் அடிப்படையில் இரட்சிப்பு கிடைக்கிறது என்று நம்புகிறவர்கள் அல்ல, ஆனால் அதற்கு மாறாக, விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிப்பு கிடைக்கிறது என்று நம்புகிறவர்களே நியாயப்பிரமாணத்தை மதிக்கின்றனர் என்ற கருத்தை ஏற்படுத்தினார். அவர் தாம், "சட்டரீதியானவர்கள்" (நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் அடிப்படையில் இரட்சிப்பு கிடைக்கிறது என்று நம்புகிறவர்கள்) என்றும் "விசுவாசி" என்றும் பெயரிட்ட தனிநபர்களுக்கு இடையில் ஒரு வேறுபாட்டைத் தரவழைத்தார்:

> ஒருபுறத்தில், சட்டரீதியானவர்கள் கீழ்ப்படிதல் உள்ள வாழ்வை நியாயப்பிரமாணத்திற்கு அளித்து அது நியாயப்பிரமாணத்தின் கேட்புகளைத் திருப்திப்படுத்தும் என்று நினைக்கின்றனர். ஆனால் ஒரு மனிதனின் கீழ்ப்படிதல் என்பது எப்போதுமே பூரணமற்றதாக இருப்பதால், அது நியாயப்பிரமாணத்தின் உயர்வான பரிசுத்தத்தை இலேசாக நினைக்கிறது. அது நியாயப்பிரமாணம் தனது கேட்புகளைவிட குறைவானவற்றில் திருப்தியடையும்படி நியாயப்பிர மாணத்தை வற்புறுத்துகிறது. இதற்கு மறுபுறத்தில் விசுவாசியானவர், தான் செய்யக்கூடுவதெல்லாம், நியாயப்பிரமாணம் அவசியப்படுகிறதைவிடக் குறைவானதாகவே இருக்கிறதாக அறிக்கையிடுகிறார். நியாயப்பிரமாணத்திடம் செயல்விளைவில் அவர், "நான் வருந்துகிறேன், என்னால் அளிக்க இயன்ற மிகச்சிறப்பான செயல், உனது நீதியையும் பரிசுத்த கேட்புகளையும் திருப்திப்படுத்த ஏறக்குறையப் போதுமானதாக இருப்பதில்லை. நான் ஒரு பதிலியை அழைத்தாக வேண்டும்: இயேசு கிறிஸ்து" என்று கூறுகிறார். சட்டரீதியானவரல்ல ஆனால் விசுவாசியே நியாயப்பிரமாணத்தை உயர்வான தூய்மையின் பீடத்தின்மீது வைக்கிறார்.[31]

**பவுல் எதைக் கூறவில்லை**

ரோமர் 3:31 வசனம், மோசேயின் நியாயப்பிரமாணம் இன்றைய நாட்களில் இன்னமும் அமுலில் உள்ளது - குறைந்தபட்சம் அது யூதர்களுக்கு மாத்திரம், அனேகமாக யாவருக்கும் அமுலில் உள்ளது என்று போதிக்கிறது எனச் சிலர் நம்புகின்றனர் என்பது இவ்வசனத்திற்கான விளக்கங்கள் மற்றும் ஒருசில மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றில் இருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. பல எழுத்தாளர்கள், பழைய உடன்படிக்கை (பழைய ஏற்பாடு) மற்றும் புதிய உடன்படிக்கை (புதிய ஏற்பாடு) ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவுபற்றி ஒருக்காலும் போராடியதில்லை என்பதும் தெளிவாக உள்ளது. எனது ஆராய்ச்சியில், நான் அவ்வப்போது தேவன் பழைய

ஏற்பாட்டின் "சடங்காச்சாரமான பிரமாணத்தை" நீக்கிப்போட்டார், ஆனால் அதன் "ஒழுக்கக்கோட்பாட்டை" நீக்கவில்லை என்ற ஆலோசனையை அடிக்கடி எதிர்கொள்வதுண்டு. அது உண்மையாயிருந்தால், "சடங்காச்சாரமானது" என்ன மற்றும் "ஒழுக்கரீதியானது" என்ன என்று கூறத் தகுதிவாய்ந்தவர் யார்?

ரோமருக்கு நிருபத்தை எழுதியதில், பவுல் நியாயப்பிரமாணம் நீக்கப்படுதல் பற்றி மறைமுகமாக மாத்திரமே பேசினார்.[32] நாம் - பழைய ஏற்பாட்டுப் பிரமாணமோ அல்லது புதிய ஏற்பாட்டுக் கட்டளைகளோ அல்லது வேறு எந்த சட்ட ஏற்பாட்டையோ - நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதால் இரட்சிக்கப்படுவதில்லை என்று காண்பித்தலே அவரது நோக்கமாக இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் கூறவிருந்ததில் எந்த நியாயப்பிரமாணம் என்பது ஒரு முக்கிய காரணியாக இருக்கவில்லை. இருப்பினும், மற்ற சந்தர்ப்பங்களில் அவர் இதைப் பற்றி எழுதியிருந்தார். பவுல் எபேசியர் 2:14, 15அ வில், கிறிஸ்து "[யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையில்] பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை [அதாவது, மோசேயின் நியாயப்பிரமாணத்தை]த் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து" என்று கூறினார். கலாத்தியர் 3:24, நியாயப்பிரமாணம் "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு ... நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" என்று உரைக்கிறது; மற்றும் வசனம் 25, "விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்கு [மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு]க் கீழானவர்களல்லவே" என்று கூடுதலாகக் கூறுகிறது. கள்ளப்போதகர்கள், பழைய ஏற்பாட்டு - விருத்தசேதனம் முதலான - பிரமாணங்களைக் கிறிஸ்தவர்கள்மீது கட்ட முயற்சிசெய்தபோது, அதைப் பவுல் பலமாகவும் தீர்மானமாகவும் எதிர்த்துச் செயல்பட்டார் (நடபடிகள் 15:1, 2அ; கலாத்தியர் 5:2 ஆகியவற்றைக் காணவும்).

நாம் இவ்விஷயத்தைப் பற்றிப் பிற்பாடு அதிகம் முழுமையாகக் கலந்துரையாடுவோம். இப்போது நாம் இவ்வளவு கூறமுடியும்: 3:31ல், பவுல் மோசேயின் நியாயப்பிரமாணம் இன்றைய நாட்களில் இன்னமும் கட்டுப்படுத்துகிறது என்று கூறவில்லை.

## முடிவுரை

ரோமர் 3:27-31 வசனப்பகுதியானது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற பவுலின் பாடக்கருத்திற்கான முன்னுரைக்கும் (3:21-26) அடுத்த அதிகாரத்தில் அந்தப்பாடக்கருத்தின்மீதான அவரது கலந்துரையாடலுக்கும் இடையில் ஒரு பாலமாகப் பணியாற்றுகிறது. 4ம் அதிகாரத்தில், பவுல் மேன்மைபாராட்டுதல் ஒழிக்கப்பட்டது என்ற உண்மையையும் (3:27ஐ 4:2 உடன் ஒப்பிடவும்), யூதர்கள் புறஜாதியார் என்ற இருசாராரும் ஒரே அடிப்படையிலேயே நீதிமான்களாக்கப்படுகின்றனர் என்பதையும் (3:29ஐ 4:11, 12, 16 உடன் ஒப்பிடவும்) திரும்பவும் தொட்டார்.

நாம் ரோமர் 3:27-31ஐ விட்டுக் கடந்து செல்வதற்கு முன்பு, பவுல் தவறாகப் புரிந்துகொள்ளப்படாதிருத்தல் அவருக்கு முக்கியத்துவமாய் இருந்தது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அவர் தமது வாசகர்கள், விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல் குறித்துப் பின்வரும் மூன்று கொள்கைகளைப்

புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார்:

- அது பாவிளைத் தாழ்மைப்படுத்துகிறது - மற்றும் மேன்மை பாராட்டுதலை நீக்கிப் போடுகிறது.
- அது விசுவாசிகளை ஒன்றிணைக்கிறது - மற்றும் வேறுபாடு காண்பதை ஊக்கங்கெடச் செய்கிறது.
- அது நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறது - மற்றும் கீழ்ப்படிதலை உற்சாகப்படுத்துகிறது.[33]

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் மீதான பவுலின் போதனையை நாம் படிக்கையில், நீங்கள் அதை உங்களுக்குச் சொந்த நடைமுறைப்படுத்துவீர்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் இழந்துபோகப்பட்டிருந்தால், அது தேவனுடைய தவறல்ல என்பது இந்நேரம் உங்களுக்குத் தெளிவாகியிருக்க வேண்டும். உங்கள் இரட்சிப்பை உறுதிப்படுத்த அவரால் செய்ய முடிந்த யாவற்றையும் அவர் செய்திருக்கிறார். அவர் தமது குமாரனை அனுப்பியதோடு நின்றுவிடவில்லை, ஆனால் அவர் கிறிஸ்துவின் பலியைப் பற்றி நமக்குக் கூறுகிற வார்த்தையையும் நமக்குக் கொடுத்து அதிலிருந்து நாம் எவ்வாறு பயனடைய முடியும் என்பதையும் நமக்கு அறிவித்திருக்கிறார். எஞ்சியது உங்களைப் பொறுத்ததாக உள்ளது. மாற்கு 16:16; நடபடிகள் 2:38 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டுள்ளபடி, நீங்கள் இன்னமும் இயேசுவின்மீது உங்கள் நம்பிக்கையை வைக்காமலும் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படியாமலும் இருந்தால், இன்றே நீங்கள் அதைச் செய்யும்படிக்கு உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்.

---

குறிப்புகள்

[1]*American Heritage Dictionary*, 4th ed. (2002), s.v. “boast.” [2]Adapted from William Hendriksen, *Exposition of Paul’s Epistle to the Romans*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 135. [3]இந்தச்சொல்விளக்கங்கள் பின்வரும் புத்தகத்தில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன: John MacArthur, *Romans 1-8,* The MacArthur New Testament Commentary (Chicago: Moody Press, 1991), 220. [4]Adapted from Jim McGuiggan, *The Book of Romans*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 137. [5]Adapted from Hendricksen, 135. [6]இந்த சித்தரிப்பு Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, Vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 524 என்ற புத்தகம் உட்பட அநேக புத்தகங்களில் காணப்படுகிறது. [7]இவ்விடத்தில், பவுல் “நாம்” என்ற வார்த்தையை, ஏவுதல் பெற்றுப் பேசியவர்கள் மற்றும் எழுதியவர்கள் எல்லாரையும் குறிக்கப் பயன்படுத்தியிருக்கலாம் - அல்லது அவர் 3:8ல் செய்தது போன்று “நாம்” என்பதை ஒரு “தலையங்கக்” கருத்தில் தம்மை மாத்திரம் குறிப்பதற்குப் பயன்படுத்தியிருக்கலாம். [8]“தீர்க்கிறோம்” என்பது, “எண்ணிப்பார்த்தல், கணக்கிடுதல்” என்று அர்த்தப்படுகிற *logizomai* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, 1971], 249). இது 4ம் அதிகாரத்தில் ஒரு திறவுகோல் வார்த்தையாக உள்ளது; இதை நாம் அந்த சந்தர்ப்பப்பொருளில் கலந்துரையாடுவோம். [9]Ibid., 440. [10]*The Interlinear Greek-English New Testament: The Nestle Greek Text with a New Literal English Translation by Alfred Marshall* (London: Samuel Bagster & Sons, 1958), 612.

[11]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis:

Concordia Publishing House, 1988), 211. [12]Edward Mote, "My Hope Is Built on Nothing Less," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [13]John David Stewart, *A Study of Major Religious Beliefs in America*, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1962), 32. [14]இந்தக்கூற்று, 1522ல் லூத்தரின் புதிய ஏற்பாட்டு ஜெர்மன் மொழிபெயர்ப்புக்கு அவரால் எழுதப்பட்ட முன்னுரையில் காணப்படுகிறது. [15]இவர்களில் பலர், இவ்வசனத்தில் "மாத்திரம்" என்பதை (அல்லது அதைப் போன்றதை) முன்னதாகவே மற்றவர்கள் கூட்டியிருந்தனர் என்று குறிப்பிட்டனர். நான் எது மகள்களுக்கு, யாரேனும் சிலர் சிலவற்றைச் செய்திருந்தனர் என்ற உண்மையானது அதை சரியானதாக்கிவிடுவதில்லை என்று போதித்தேன். [16]J. W. MacGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 323. [17]"ஒருதெய்வக்கோட்பாடு (Monotheism) என்பது ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார் என்ற நம்பிக்கையைக் குறிக்கிறது: "ஒரே" அல்லது "ஒரு" (*mono*) + "தேவன்" (*theos*). [18]"ஷேம்மா" என்பது "கேள்" என்பதற்கான எபிரெய வார்த்தையாகும், உபாகமம் 6:4 இவ்வார்த்தையைக் கொண்டுதான் தொடங்குகிறது. [19]மூல வசனத்தில் "விருத்தசேதனம்" மற்றும் "விருத்தசேதனமில்லாமை" என்றே நேரடியாக உள்ளது. [20]யூதர்கள் "விசுவாசத்தினால் [*ek*]" நீதிமான்களாக்கப்படும் வேளையில், புறஜாதிகள் "விசுவாசத்தின் மூலமாக [*dia*]" நீதிமான்களாக்கப்படுகின்றனர் என்று வசனப்பகுதி கூறுகிறது. மாறுபட்ட இரண்டு கிரேக்க முன்னிடைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதன் தனிச்சிறப்பைக் கண்டறியச் சிலர் முயற்சி செய்துள்ளனர், ஆனால் பவுல் அனேகமாக (பெரும்பாலான எழுத்தாளர்கள் செய்வதுபோன்று), பல் வகைத்தன்மைக்காகவே ஒருபொருட் பல சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.

[21]F. F. Bruce, *The Letter of Paul to the Romans*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 95. [22]Ibid., 95-96. [23]N.Tom Wright, *New Tasks for a Renewed Church* (London: Hodder and Stoughton, 1992), 168. [24]Adapted from Halford E. Luccock, *Preaching Values in the Epistles of Paul,* vol. 1, *Romans and First Corinthians* (New York: Harper & Brothers, 1959), 37-38. [25]யோவானின் நிருபங்களில், நியாயப்பிரமாணத்திற்கு எதிரானகொள்கை என்பது அவர் வெளிப்படுத்திய தவறுகளில் ஒன்றாக இருந்தது (எடுத்துக்காட்டாக, 1 யோவான் 3:4, 10; 5:2, 3 ஆகியவற்றைக் காணவும்). [26]3:8 மற்றும் 3:28ல் போலவே, இங்கு பவுல் "நாம்" என்ற வார்த்தையை பன்மையில் அல்லது "தலையங்கக்" கருத்தில் பயன்படுத்தியிருக்கலாம். [27]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 3. [28]*The Interlinear Greek-English New Testament,* 612. [29]Vine, 207. [30]பார்க்ளே என்பவர் மொழிபெயர்த்த வேதாகமத்தில், "Do we then through faith completely cancel out all law?" என்றுள்ளது (William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 60.

[31]Adapted from McGuiggan, 139. [32]அவர் இவ்விஷயத்தை நேரடியாக எடுத்துரைக்கவில்லை என்றாலும் - 7:1-6 பற்றிய நமது கலந்துரையாடலில் நாம் காணப்போகிறபடி - அதன்மீதான தமது சிந்தனை பற்றிய பலத்த குறிப்புகளைக் கொடுத்தார். [33]Adapted from John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 121.